1968 பிப்ரவரி 20]

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, பிரையாரிட்டி லிஸ்டுபடிதான் போரிங் மெஷின் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு போரிங் மெஷின் வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன் விண்ணப்பித்தும் இன்னும் வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பிரையாரிட்டி லிஸ்டிலே அவருடைய பெயர் கடைசியிலே இருக்கலாம்.

கால்நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு, திருப்பூர்

*85 **வினா.—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள கால்நடைத் தீவனத் தயாரிப்பு தொழில் பிரிவு எந்த ஆண்டு, எந்தத் தேதியில் ஆரம்பிக்கப் பட்டது?

(இ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு சத்து நிறைந்த தீவனங்களை விநியோகம் செய்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) கால் நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு 1967 ஆகஸ்டில் திருப்பூரில் நிறுவப் பட்டது.

(இ) 1967 செப்டம்பரில் 2.6 டன் கால்நடைத் தீவனம் விற்பனையாயிற்று.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த தீவனத் தொழிற்சாலையை ஆரம்பிக்கக் கூடிய நேரத்திலே, அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் எந்த அளவுக்கு நாம் தீவனம் தயாரிக்க முடியும், அதை எவ்வளவு விநியோகம் செய்யலாம் என்று திட்டமிட்டுத்தான் துவக்கி இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படித் திட்டமிட்டு ஆரம்பித்தும் அங்கே தீவனம் விநியோகிக்காமல் இருப்பதற்கான காரணம் என்ன ? அதை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் எவ்வளவு ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள் ? அப்படிக் கடன் வாங்கியும் அதைச் செலவு செய்யாமல் இருப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: திருப்பூரில் கால்நடைத் தீவனத் தயாரிப்புப் பிரிவு ஒன்றை நிறுவுவதற்கு காங்கேயம் கால்நடைத் தீவனத் தயாரிப்பு விற்பனை செய்பவர்கள் மனுப் போட்டார்கள். அதற்கு ரூ. 1,20,000 கடனாகவும் உதவித் தொகை யாகவும் வழங்கப்பட்டது. மூலதனக் கடனாக லட்ச ரூபாய் வழங்கி விட்டார்கள். நாள் ஒன்றுக்கு 3 டன் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த நிறுவனம் அமைக்கப் பட்டது. ஆனால் இங்கே செப்டம்பர் மாதத்தில் 3.6 டன் தான் உற்பத்தி ஆகிற்று. அதற்குக் காரணம் கேட்டதற்கு கச்சாப் பொருள்கள் போதுமான அளவு கிடைக்காத காரணத்தால் இது

எதிர்பார்த்த அளவு உற்பத்தி ஆகவில்லை என்று தெரிவித்தார்கள். காட்டன் சீட்ஸ் போன்ற கச்சாப் பொருள்கள் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அந்த நிறுவனம் சரியாக இயங்கி வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் கேள்வி கேட்பார்களானால் அதுபற்றிய புள்ளிவிவரம் தயாரித்துக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெங்கடசாமி.

திரு. மு. சின்னசாமி : அந்த காங்கேயம் கால்நடைத் தீவனம் தயாரிப்பு நிலையத்தில் முன்னாள் அமைச்சர் மன்றாடியார் அவர்களுக்கு பங்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றிய தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் தகவல் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் குறிப்பிட்டது ஒருவரைப் பற்றி, கேள்வி கேட்பது வேறு ஒருவராக இருக்கிறார்.

THIRU B. VENKATASWAMY : Sir, May I know from the Hon. Minister the varieties of fodder grown there and the acreage under the fodder crop?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தத் தீவனம் தயாரிப்புபற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். இந்தக் கேள்வியோடு தொடர்பில்லை அது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, இந்த மாட்டுத் தீவனத்தை தயாரிக்கின்ற முறையிலே பல கலப்படங்கள் நடக்கின்றன. அந்தத் தீவனத்தைக் கலக்கின்றபொழுது பல குடியானவர்கள் ஏமாற்றப்படுகின்ற நிலை இருக்கிறது. ஆகையினால் அரசாங்கமே இந்த மாட்டுத் தீவனத்தை எந்தெந்த விகிதத்தில் கலக்கலாம், இன்னின்ன பொருள்களைப் போட்டு கலக்கலாம், இன்னின்ன பெர்சன்ஸ் கலக்கலாம் என்று விளம்பரப் படுத்தினால் நன்றாக இருக்கும். அந்த குறிப்பிட்டவர்களிடம் வாங்குவதற்கும் சௌகரியமாக இருக்கும். ஆகவே, இந்த விளம்பரத்தை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் குறிப்பிடுவதுபோல தவறு ஏற்படாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் எந்தப் பகுதியிலாவது அந்தமாதிரியான கலப்புச் செய்யப்படுவதாக நிலைமை இருக்குமானால் அந்த விவரத்தை அரசாங்கத்திற்கு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, கோர் ஸ்தாபனத்திலிருந்து தனியார் பள்ளிகளுக்குக் கொடுத்த கோதுமை ஏறத்தாழ 1,000 மூட்டை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து . . .

1968 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்வியோடு ஒட்டிச் சொல்லுங்கள்.

திரு. மு. ச. சிவசாமி : அதற்குத்தான் வருகிறேன். கேர் ஸ்தாபனத்தால் பள்ளிக்கூடங்களுக்கு என்று கொடுக்கப்பட்ட 1,000 மூட்டை கோதுமை, மாட்டுத் தீவனம் என்ற பெயரால் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தூத்துக்குடி கொண்டுவந்து அதை அரைத்து கேரளாவுக்குப் போய்க்கொண்டிருப்பதை தடுக்க அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் விவரம் கொடுத்ததற்கு நன்றி. அதுபற்றிய முழு விவரமும் எழுதி அனுப்புவார்களேயானல் அதுபற்றி பரிசீலனை செய்து அப்படி தவறான காரியங்களில் ஈடுபட்டவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள் முழு விவரமும் எழுதிக் கொடுப்பார் என்று நம்புகிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : 'காட்டில் ஃபுட்' என்பதை பல கம்பெனிகள் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு கட்டுப்பாட்டுடன் ஸ்டாண்டர்டு மிக்ஸ்சர் என்று சொல்லக்கூடிய 'அக்மார்க்' போட்டு உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவது பற்றி சர்க்கார் யோசிக்குமா? ஏனென்றால், ஒரு நேரம் கொடுக்கக்கூடிய காட்டில் ஃபுட் அடுத்த நேரம் இல்லாமல் இருக்கிறது. பல கம்பெனிகள் உற்பத்தி செய்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்களுடைய அரிய ஆலோசனையை செயல்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது இந்த நிறுவனத்திற்கு ரூ. 1,20,000 கடனாகவும், மானியமாகவும் கொடுத்ததாகச் சொன்னார்கள். அதில் கடன் எவ்வளவு ? மானியம் எவ்வளவு ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கடனாகவும், மானியமாகவும் மொத்தமாக வழங்கியது ரூ. 1,20,000. அது சரியாக இயங்கினால், அதில் 75 சதவிகிதம் மானியமாகக் கொடுக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாய வேலைக்கு ஆட்கள்

* 86 வினா—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன்** : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் வெளியூர்களிலிருந்து வேலைக்கு ஆட்களை இறக்குமதி செய்யும் மிராசுதார்களின் நடத்தையால் கிராமப்புறங்களில் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், அமைதியற்ற நிலையையும் அரசாங்கம் அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?